2009 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

சுமை தூக்கும் தொழிலாளர்கள்

***3339—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, சுந்தரக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலையில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம், சம்பள உயர்வு, மருத்துவப் படி, தூசிப் படி, சீருடை மற்றும் சோப்பு போன்ற வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுமை தூக்கும் தொழிலாளர்கள் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்திருந்தால், அவர்கள் நிரந்தரமாகப் பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்கள். 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த சுமை தூக்கும் தொழிலாளர்களுக்குப் பச்சை நிற அடையாள அட்டை வழங்கப்படுகிறது. ஓராண்டு நிறைவு செய்த தொழிலாளர்களுக்கு இளஞ்சிவப்பு அட்டை 27-4-1999 முதல் வழங்கப்பட்டு வருகிறது. சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஏற்றி, இறக்கும் மூட்டைகளுக்கேற்பக் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. ஏற்றி, இறக்கும் கூலியாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு 13 ரூபாய் 60 பைசா என்று சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இருந்ததை, தமிழக அரசினால், தலைவர் கலைஞர் அவர்களால் 6-8-2008 அன்று மேலும் 10 சதவிகிதம் கூடுதலாக வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்போது கூடுதலாக ஒரு ரூபாய் 36 பைசா என்கிற அடிப்படையிலே கொடுக்கப்படுகிறது.

மருத்துவப் படியைப் பொறுத்தளவில், பணியின்போது விபத்து ஏதாவது ஏற்பட்டால், பச்சை அட்டையைப் பெற்ற நிரந்தர சுமை தூக்கும் தொழிலாளர்கள், 1923 ஆம் வருடத்திய தொழிலாளர்

இழப்பீட்டுச் சட்டத்தின்படி இழப்பீட்டுத் தொகையைப் பெறத் தகுதியுள்ளவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். அதனால், அரசு உத்தரவின்படி இப்போது முதலுதவி சிகிச்சை மட்டுமே செய்யப்படுகின்றது; மருத்துவப் படியைப் பெறத் தகுதியில்லை. தூசிப் படி, சீருடை மற்றும் சோப்பு போன்ற சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்படாது.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே விரிவான பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். பல சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். அதிலே குறிப்பாக, பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களுக்கு இரண்டு விதமான அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல, பல தொழிற்சங்கங்களில் அவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். தொழிற்சங்கம் என்ற உரிமையில், அது முறையாகப் பதிவு செய்யப்பட்டு, நமது அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு வாக்குரிமை என்ற நிலை இல்லாத சூழ்நிலை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவர்களுடைய தேர்தல் நடைபெறுகின்ற காலங்களில், அங்கீகரிக்கப்பட்ட அந்த உறுப்பினர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டு, வாக்களிக்கின்ற உரிமையைப் பெறவேண்டும். இது அவர்களுடைய முக்கியமான கோரிக்கையாக இருக்கின்றது.

அதேபோல, கூலி உயர்வு குறித்து இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இதிலே தனியாரிடம் வேலை பார்க்கின்ற சுமை தூக்கும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலியையும், இவர்கள் பெறுகின்ற கூலியையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ஐந்தில் ஒரு பங்குதான் நாம் அளிக்கின்றோம் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. தனியாரிடம் மிக அதிகமான அளவு கூலி கிடைக்கின்றது என்று தொழிலாளர்கள் சொல்கின்ற காரணத்தாலே, நமது அரசு மீண்டும் இதைப்பற்றிப் பரிசீலித்து, அவர்களுக்குக் கட்டுப்படியான அளவில் கூலி உயர்வு கிடைப்பதற்குரிய முயற்சியை எடுக்கவேண்டும். அதேபோல நவீன அரிசி ஆலைகள் என்ற முறையில் நான்

2009 ஜூலை 1]

சுந்தரக்கோட்டை ஆலையைப் பற்றிக் குறிப்பிட்டுக் கேட்டிருக்கின்றேன். அங்கே அரைவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. டெல்டா மாவட்டம் என்ற முறையில் ஏராளமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், கேள்வியை சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: இதையொட்டித்தான் கேட்கின்றேன். மன்னார்குடி சுற்றுப்புறப் பகுதியிலிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு அங்குதான் சேமித்து வைக்கப்படுகின்றது. அது திறந்தவெளிக் கிடங்காகவும் இருக்கின்றது. ஆகவே, அந்த சேமிப்புக் கிடங்கை நவீனப்படுத்திக் கொடுப்பதற்கு உரிய முயற்சியையும் சேர்த்துச் செய்தால், அது பாதுகாப்பான முயற்சியாக இருக்கும். ஆகவே, அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்கள் ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவர்கள்தான். அவர்களுடைய பணி நிரந்தரம் இல்லாமல் இருந்ததைத் தலைவர் கலைஞர் அவர்கள் உணர்ந்த காரணத்தால், அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்யவேண்டுமென்று தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்கள்தான் 27-4-1999 அன்று ஆணை பிறப்பித்தார்கள். அதற்கு முன்னால் அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருந்தது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் ஒரு மேஸ்திரியின்கீழ் வேலை செய்து, அவர்கள் என்ன காசு கொடுக்கின்றார்களோ, அதை வாங்கித்தான் பணியாற்றி வந்தார்கள். எனவே, அந்தத் தொழிலாளர்களுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, இப்படிப்பட்ட ஆணையைப் பிறப்பித்து, அவர்களுக்கு இன்றைக்கு இரண்டு விதமான அட்டைகள் பிரிக்கப்பட்டு, பச்சை அட்டை என்றும் இளஞ்சிவப்பு அட்டை என்றும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் சுந்தரக்கோட்டை, எம்.ஆர்.எம். நவீன அரிசி ஆலையில் 43 தொழிலாளர்கள் பச்சை அட்டையையும், 14 தொழிலாளர்கள் இளஞ்சிவப்பு அட்டையையும், அட்டையில்லாதவர் ஒன்று எனவும், ஆக, மொத்தம் 58 பேர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே அவர்களுக்கு அனைத்து சலுகைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சலுகை இல்லையென்று சொல்ல முடியாது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, ஆணை பிறப்பித்ததற்குப் பிறகுதான், அவர்களுக்கு அனைத்து சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. E.P.F. சலுகை அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. அவர்களுடைய சம்பளத்தில் 12 சதவிகிதம் E.P.F.-க்காகப் பிடிக்கின்றார்கள். Management சார்பிலும் 12 சதவிகிதம் பிடித்தம் செய்து E.P.F. கொடுக்கின்றோம். அதோடு மட்டுமல்ல, பொங்கல் தினத்தன்று கருணைத் தொகையாக 350 ரூபாயும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. மேலும், அவர்களுக்கு எடையின் அடிப்படையில்தான் கூலி நிர்ணயம் செய்ய முடியும். ஏனென்று சொன்னால், சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்பவர்கள்தான். இருந்தாலும்கூட, கழகம் நேரடியாக அவர்களுக்கு ஆணை பிறப்பித்து, இன்றைக்கு முறையாகக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இல்லையென்று மறுக்க முடியாது.

அவர்களெல்லாம் தேர்தலிலே வாக்களிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். இது சம்பந்தமாக ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு நடைபெற்று, அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்தான் வாக்குரிமை பெறமுடியும் என்று ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திலே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்ற ஆணையின்படிதான் தேர்தல் நடைபெறுகின்றது. அதை எதிர்த்துக்கூட இப்போது நீதிமன்றத்திற்குப் போய் இருக்கின்றார்கள். நீதிமன்றம் என்ன ஆணையைப் பிறப்பிக்கின்றதோ, அதன்படி உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி, அந்தத் தேர்தலை நடத்துவதற்கும் கழகத்தின் சார்பில் மேற்கொண்டு முயற்சிகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Civil Supplies godown-ல் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற மூட்டை சுமக்கும் தொழிலாளர்கள் இன்றைய காலக்கட்டத்தில் contract labourer-ஆக வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள். Contract labour முறையை ஒழித்து, அவர்களை நேரடித் தொழிலாளர்களாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில், சுமை தூக்கும் தொழிலாளர்கள் மூன்று கட்டங்களாக இருக்கிறார்கள். ஒன்று, நவீன அரிசி ஆலையில் பணியாற்றுபவர்கள். இன்னொன்று கிடங்குகளிலே பணியாற்றுபவர்கள். இன்னொன்று, பருவ கால அடிப்படையிலே D.P.C.யிலே—நேரடி கொள்முதல் நிலையங்களிலே பணியாற்றுபவர்கள் என மூன்று வகைகளாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு நேரடியாக அரசு சலுகை தரவேண்டுமென்று சொன்னால், ஒன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக அவர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு வந்திருக்கவேண்டும் அல்லது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக விளம்பரம் செய்யப்பட்டு, தகுதியுள்ளவர்கள் என்று தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஆணை பிறப்பித்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் இரண்டு அடிப்படையிலும் இல்லை. ஒப்பந்த அடிப்படையிலே வருகிறார்கள். அப்படிப் பார்த்தால், நவீன அரிசி ஆலைகளிலே கிட்டத்தட்ட 760 பேர் பணியாற்றுகிறார்கள். அதேபோன்று நேரடிக் கிடங்குகளிலே 4,431 பேர் பணியாற்றுகிறார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலே 13,226 பேர் பணியாற்றுகிறார்கள். ஆக, அவர்களை நிரந்தரம் செய்தால்தான் அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கின்ற சலுகைகளைச் செய்ய முடியும். ஆக, அந்த அடிப்படையிலே மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாகவும் வரவில்லை, கழகத்தின் சார்பாக விளம்பரப்படுத்தப்பட்டு, தகுதியானவர்கள் என்றும் எடுக்கப்படவில்லை. ஒப்பந்த அடிப்படையிலே வேலை செய்கின்ற காரணத்தினால்தான், நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களை விட்டுவிடக்கூடாது, அவர்களும் இந்த நாட்டினுடைய பிரஜைகள்தான் என்ற அடிப்படையில்தான், 27-4-1999-லே ஒரு ஆணை பிறப்பித்து, அவர்களுக்கு அரசாங்கத்தின்மூலமாகப் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.